## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.119/2012

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுன் மாதம் 08 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மல்லீஸ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : சலபதி | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : துப்புரவு தொழிலாளர் | வட்டம் | : திருத்தணி |

**08.06.2026**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

6. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் வாதி மற்றும் அவரது தாயார் விசாலா இந்நீதிமன்றத்தில் இந்த சொத்து தொடர்பாக அ.வ.எண்.55/2011ஐ தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கை அவர்கள் வாபஸ் பெற்றுவிட்டார்கள். இந்த வாதி அன்னாள் மற்றும் அவரது தாயார் சேர்ந்து இந்த வழக்கு சொத்திற்கும் மற்றும் இரண்டு சொத்திற்கும் சேர்த்து அ.வ.எண்.55/2011ஐ தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். இந்த வழக்கை அன்னாள் மட்டும் அவருக்கு சொந்தமான புல எண்ணிற்கு மட்டும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து எங்களுடையது. எங்களுக்கு பட்டா கொடுக்காமல் DKT பட்டாவை மற்றொருவருக்கு எப்படி கொடுக்க முடியும்.

7. வழக்கு சொத்திற்கான பட்டா, சிட்டா அடங்கலோ வருவாய் மற்றும் என் பெயரில் உள்ள உரிமை ஆவணங்களோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் என் பெயரில் இல்லை. என் கொள்ளு தாத்தா அந்த இடத்தில் புழங்கி வந்தார். என் கொள்ளு தாத்தா பெயரில் அடங்கல் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் கொள்ளு தாத்தா பெயரில் அடங்கல் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் இந்த

வழக்கிற்கு பின்பு ஆவணங்களை கேட்டதற்கு இந்த வழக்கு நிலுவையில் இருப்பதாக கூறி ஆவணங்கள் கொடுக்கவில்லை. DKT பட்டா யாருக்கு எந்த சொத்திற்கு கொடுத்தார்கள் என்றால் புல எண்.124/14க்கு அன்னாளுக்கு கொடுத்துள்ளார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் DKT பட்டா யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

8. அ.வ.எண்.55/2011ன் தீர்ப்பாணையிலேயே "The suit be and the same is hereby dismissed as withdrawn with liberty to file fresh suit" என்றுதான் வழக்கு திரும்ப பெறப்பட்டுள்ளது என்றால் இல்லை. எனவே முன்தீர்ப்பு தடை தோஷம் வராது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 17 சரிதிகா த/பெ போகன் என்று உள்ளது என்றால் ஆமாம். மேற்படி சரிதிகாவின் வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள 11.04.1975ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் நகல் ஆவணம் தாக்கல் செய்துள்ளதில் அந்த ஆவணத்தை பற்றி எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புல எண்.124/19ல் 9 செண்ட்டிற்கான ஆவணம்தான் பி.வா.சா.ஆ 15 ஆவணம் என்றாலும் பி.வா.சா.ஆ 15 ஆவணம் ஒரே மணைக்கான ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல.

9. நீதிமன்ற ஆணையர், நில அளவையர் தாக்கல் செய்த அறிக்கையில் என்ன உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. அந்த அறிக்கையில் வழக்கு சொத்தில் வேர்கடலை பயிர் செய்து உள்ளார்கள் என்றும் தென்மேற்கு பகுதியில் குடிசை உள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அந்த அறிக்கைக்கு நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றாலும் அருள் என்பவர் வேர்கடலை பயிர் செய்து வந்தார். அன்னாள் யார் என்று எனக்கு தெரியாது. அருள் என்பவர் வேர்கடலை பயிர் செய்து வந்ததாக நான் தற்போது கூறும் விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் அருள்தான் பயிர் செய்து வந்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே அருள் பயிர் செய்திருந்தால் ஆணையர் தனது அறிக்கையில் சொல்லியிருப்பார் என்றாலும்

நான் எனது ஆட்சேபணையில் அந்த விவரத்தை சொல்லியிருப்பேன் என்றாலும் என்னிடம் அதை கேட்கவில்லை, நான் சொல்லவில்லை.

10. ஆணையர் அறிக்கை தவறானது என்பதற்காக நான் மீண்டும் ஆணையர் நியமனம் கோரி நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் ஏற்கனவே மனு தாக்கல் செய்தேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு இருந்ததாகவும் நான் அனுபவித்து வந்ததாகவும் கூறியிருப்பதை நிரூபணம் செய்ய நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)